# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2135/18 - 2019 අගෝස්තු මස 05 වැනි සඳුදා - 2019.08.05

*2135/18 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 05 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: LAN/ACQU/NAVPE/D31/02.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் குறிப்பு
இல.: 4- 3/4/2017/D/520.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்** :

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், கோறளைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் பேத்தாழை 205B கிராம அலுவலர் பிரிவில் கருங்காலிச்சோலை கிராமத்தில் அமைந்துள்ள மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் அவர்களால் தயாரிக்கப்பட்ட வரைபட இலக்கம் PPMADA 2793, 2019.06.25 ஆந் திகதியுடைய வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள விஸ்தீரணத்தில் சுமார் 1.0117 ஹெக்டயார் அளவுடைய கீழே விபரிக்கப்படும் காணித் துண்டு வருமாறு:

01. **துண்டு இல. 01 - காணியின் பெயர்: வெள்ளையடிப்பூவல்; விபரம்: நிரந்தரமான கட்டடங்கள், 18 பனை மரங்கள், 10 தென்னை மரங்கள், 01 மா மரம் மற்றும் 02 கிணறுகள்; உரிமை கோருவோர்: N. V. B. ஜோன் பிள்ளை; விஸ்தீரணம்: 1.0117 ஹெக்டயார்.**

வடக்கு: வாழைச்சேனை ஆறு, N. V. B. ஜோன்பிள்ளைக்குச் சொந்தமான வெள்ளையடிப்பூவல் தோட்டம்; கிழக்கு: N. V. B. ஜோன்பிள்ளைக்குச் சொந்தமான வெள்ளையடிப்பூவல் தோட்டம்; தெற்கு: N. V. B. ஜோன்பிள்ளைக்குச் சொந்தமான வெள்ளையடிப் பூவல் தோட்டம், வீதி (பிரதேச சபை) உரிமை கோரப்படாத வெள்ளையடிப்பூவல் தோட்டம்; மேற்கு: வீதி (பிரதேச சபை) உரிமை கோரப்படாத வெள்ளையடிப்பூவல் தோட்டம் மற்றும் வாழைச்சேனை ஆறு.


1A - G 30675 - 12 (2019/08)



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கோறளைப்பற்று பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக் குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எஸ். ராஜ்பாபு,
பிரதேச செயலாளர்,
கோறளைப்பற்று,
வாழைச்சேனை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கோறளைப்பற்று,
வாழைச்சேனை,
2019, யூலை 31

8 - 744